# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF FAST TRACK COURT , THOOTHUKUDI

STC.No.288/2022 Date : 08.06.2023.

எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனுவின் பேரில் PW.1 சுரேஷ்குமார் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் அடிப்படையில் குறுக்கு விசாரணை

1. எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். 3 வது எதிரி ரவி மூலமாக எனக்கு 2 வது எதிரி ராஜாமணியை கடந்த 5 வருடங்களாக எனக்கு தெரியும். 2 வது எதிரி எமது தெருவிற்கு பக்கத்து தெருவைச் சேர்ந்தவர் அதன் அடிப்படையில் ரவியை எனக்கு தெரியும். கன்னியாகுமரி மல்டிஸ்டேட் அக்ரிகல்ட்சர் கோ ஆப்ரேட்டிவ் சொசைட்டி என்ற முதலாவது எதிரி தனியாருக்கு பாத்தியப்பட்டதா அல்லது அரசாங்கத்திற்குரியதா என்றால் அரசாங்கத்தின் அன்டர் டேக்கிங் பெற்றது என்று என்னிடம் கூறியிருந்தார். நான் புகார் மனுவில் ஒரு முறை ஐந்து லட்சமும், இரண்டு மாதம் கழித்து இரண்டு லட்சமும் வரவு வைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவின் நான்காவது பக்கத்தில் இரண்டாவது எதிரி அவருடைய சொந்த தேவைக்காகவும், ரூ. 2,00,000/- வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. எதிரி சொந்த தேவைக்காக வாங்கியதாக கூறும் மேற்படி ரூ. 2,00,000/- தொகையை கடந்த 23.05.2022 அன்று திரும்ப கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் 2 வது எதிரி ராஜாமணி என்றால் சரிதான். என்னிடம் 2 மற்றும் 3 எதிரிகளின் தனிப்பட்ட காசோலைகள் எதுவும் கிடையாது. 1 வது எதிரியின் காசோலை மட்டும் தான் இருந்தது. அதன் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கில் கூறியுள்ள ரூ. 7,00,000/- தொகைக்கு 2 வது எதிரியும் 3 வது எதிரியும் தான் பொறுப்பு என்றால் சரிதான். என்னிடமிருந்து ராஜாமணி ஏற்கனவே வாங்கிய ரூபாய் இரண்டு லட்சம் தொகைக்கு யார் பொறுப்பு என்றால் ரவி தான் என்னிடமிருந்து ரூபாய் இரண்டு லட்சம் தொகை வாங்கினார். அதற்கு அவருடைய காசோலையை என்னிடம் கொடுத்து அந்த காசோலை 23.05.2022 அன்று வரவு வைக்கப்பட்டுள்ளது.

3. நான் கொடுத்த தகவலின் அடிப்படையில் தான் நான் தாக்கல் செய்துள்ள புகார் மனு தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவின் 4 வது பக்கத்தில் 2 வது எதிரியிடம் ரூ. 2,00,000/- தொகை கடனாக கொடுத்து அதை அவர் திரும்ப கொடுத்துள்ளார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ரூ. 2,00,000/- தொகைக்கும் ராஜாமணிக்கும் எந்த தொடர்பும் கிடையாது. மேற்படி பரிவர்த்தனை எனக்கும் ரவிக்கும் இடையேயானது. நான் எதிரிகளிடம் செலுத்தியதாக கூறும் ரூ. 7,00,000/- தொகையை திரும்ப செலுத்தும் வகையில் பகுதி தொகையாக மேற்படி ரூ. 2,00,000/- என்னிடம் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி செலுத்தப்பட்ட பகுதி தொகையை காசோலையில் குறிப்பிடாமல் நான் தாக்கல் செய்துள்ள காசோலை மோசடி வழக்கானது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தவறான கணக்கு வழக்குகளுடன் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTT0B0020242022/truecopy/order-1.pdf

4. நான் ரவிக்கு கொடுத்ததாக கூறும் தொகையை எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரொக்கப்பணமாக கொடுத்தேன். நான் சிவில் காண்ட்ரக்டர் தொழில் செய்து வருகிறேன். நான் வருமான வரி கணக்கு செலுத்தி வருகிறேன். நான் வழக்கில் கூறியுள்ள பரிவர்த்தனையை என்னுடைய வருமான வரி கணக்கில் காண்பிக்கவில்லை. என்னுடைய வருமான வரி கணக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். பொதுவாக பணம் கொடுக்கல் வாங்கல் விபரத்தை என்னுடைய வருமான வரி கணக்கில் காட்டவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். திரும்ப கொடுத்துவிடுவேன் என்று கூறியதால் வருமான வரி கணக்கில் காண்பிக்கவில்லை. எதிரி ரவி என்பவரிடம் நான் எந்த தேதியில் ரூ. 2,00,000/- தொகையை கொடுத்தேன் என்றால் 25.01.2021 அன்று கொடுத்தேன். நான் 2019 காலகட்டத்தில் 3 வது எதிரி கணக்கில் வரவு வைத்தபின்னர் எனக்கும் எதிரிகளுக்கும் இடையே 2019- 2020 காலகட்டத்தில் பிரச்சனை ஏற்பட்டது என்றால் 2020 காலகட்டத்தில் நான் டெப்பாசிட் செய்த தொகைக்கு ரசீது கேட்டு அவர்கள் கொடுக்காததால் பிரச்சனை இருந்தது.

5. பொதுவாக பணம் கொடுக்கல் வாங்கலில் ஏற்கனவே பிரச்சனை இருக்கும் ஒரு நபரிடம் எந்த ஒரு நபரும் மீண்டும் பணம் கொடுக்க வாய்ப்பில்லை என்றால் பழக்கத்தின் அடிப்படையில் கொடுத்தேன். நான் கூறியுள்ளவாறு 3 வது எதிரியான ரவி வாங்கிய கடனுக்கு 3 வது எதிரி தான் பணம் திரும்ப கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். ஆகையால் என் கட்சி படி 3 வது எதிரி வாங்கியதாக கூறும் தொகையை என்னுடைய புகார்மனுவின் 4 வது பக்கத்தில் 2 வது எதிரி திரும்ப செலுத்திவிட்டதாக கூறியுள்ளதால் வழக்கில் கூறியுள்ள ரூ. 7,00,000/- தொகையிலிருந்து ரூ. 2,00,000/- தொகை திரும்ப செலுத்தப்பட்டதாகவே கருதப்படும் என்றால் சரியல்ல. நான் 1 வது எதிரி வங்கி கணக்கில் எந்த ஒரு தொகையும் டெப்பாசிட் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய புகார் மனுவில் 2 மற்றும் 3 வது எதிரிகள் 1 வது எதிரியின் தினசரி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எந்த வகையில் மேற்படி 2 மற்றும் 3 வது எதிரிகள் 1 வது எதிரியின் தினசரி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்றால் 1 வது எதிரி வங்கியில் டெப்பாசிட் செய்து குறித்து 2 மற்றும் 3 வது எதிரிகள் தான் கேன்வாஷ் செய்து வந்தார்கள். என்னிடமும் மேற்படி இரண்டு எதிரிகளும் சேர்ந்து வந்து தான் டெப்பாசிட் செய்ய கூறினார்கள். மேற்படி விபரத்தை என்னுடைய புகார் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி விபரத்தை வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. காசோலை தொகையான ரூ. 7,00,000/- தொகையில் ரூ. 2,00,000/- தொகையை பெற்றுக்கொண்டு தற்போது நான் பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTT0B0020242022/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com